**நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 13, 2016**

1. 2016 பிரிக்ஸ் வர்த்தக அமைச்சர்கள் மாநாடு இந்தியாவின் எந்த நகரத்தில் தொடங்கியது ?
A. உதய்பூர்
B. இந்தூர்
C. புது தில்லி
D. லக்னோ

**விடை : C. புது தில்லி**

பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வழிகளை விவாதிக்க, 2016 பிரிக்ஸ் வர்த்தக அமைச்சர்களின் கூடுகை புது தில்லியில் தொடங்கியது. இந்த கூட்டத்தின் போது, பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்க தலைவர்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs), சேவைகள், அறிவுசார் சொத்து உரிமைகள், வர்த்தக மேம்பாடு, கட்டணமல்லாத நடவடிக்கைகள் தீர்மானம் மற்றும் தரப்படுத்துதல் ஆகியவற்றை கையாள்வதில் ஒரு கட்டமைப்பை ஏற்றுக்கொள்ள உள்ளனர்.

2. 2016 உலக பார்வை தினத்தின் (World Sight Day - WSD) மையக்கரு என்ன ?
A. Universal Eye Health
B. No more Avoidable Blindness
C. Stronger Together
D. Eye care for all

**விடை: C. Stronger Together**

பார்வையற்றோர் மற்றும் பார்வை கோளாறு உள்ளவர்கள் மீது உலகம் கவனம் செலுத்தவேண்டி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் 2வது வியாழக்கிழமை அன்று உலக பார்வை தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 13 அன்று "Stronger Together" என்ற மையக்கருவுடன் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இந்திய அரசு, இலவச கண் பரிசோதனை மற்றும் சிகிச்சையை ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக சுகாதார மையங்கள், மருத்துவ கல்லூரிகள், கண் மருத்துவ பிராந்திய நிறுவனங்கள் மற்றும் நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்குகிறது.

3. 2016 சர்வதேச பேரிடர் குறைப்பு தினத்தின் (International Day for Disaster Reduction-IDNDR) மையக்கரு என்ன ?
A. My City is Getting Ready!
B. Live to Tell
C. Living with Disability and Disasters
D. Resilience is for Life

**விடை: B. Live to Tell**

பேரழிவிற்கு பிறகு மீண்டுவர உதவும் பல்வேறு குழுக்களையும் தேசங்களையும் உருவாக்க பங்கேற்கும் ஒவ்வொரு தனிநபர், சமூகம் மற்றும் அரசை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு

ஆண்டும் அக்டோபர் 13ம் நாள் சர்வதேச பேரிடர் குறைப்பு தினம் கொண்டாடப்படுகிறது.இது உலகளவில் ஆபத்து விழிப்புணர்வு மற்றும் பேரழிவு குறைப்பை ஊக்குவிக்கும் ஒரு நாளாக உள்ளது. 2016 ஆம் ஆண்டிற்கான மையக்கரு “Live to Tell: Raising Awareness, Reducing Mortality” ஆகும், இது உலகளவில் இறப்பை குறைப்பதை குறிக்கோளாக கொண்டுள்ளது.

4. ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாய குறைப்பு (UNISDR) அலுவலகத்தின் தலைமையகம் எங்குள்ளது ?

A. பாரிஸ்

B. ஜெனீவா

C. நியூயார்க்

D. பெர்லின்

**விடை: B. ஜெனீவா**

ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாய குறைப்பு அலுவலகம் (UNISDR), ஐக்கிய நாடுகள் செயலகத்தின் ஒரு பகுதியாகும் மற்றும் அதன் செயல்பாடுகள் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் மனிதாபிமானம் ஆகிய துறைகளில் பரவியிருக்கும். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ளது. இது சமீபத்தில் செய்திகளில் வரக்காரணம், 2016 சர்வதேச பேரிடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு, UNISDR ஆனது “Sendai Seven campaign- 7 Targets, 7 Years” என்ற வலிமைமிக்க முயற்சியை துவங்கியுள்ளது. உயிர்களை காக்கும் நோக்கமும் , உயிர் இழப்புக்களை குறைத்து மற்றும் பேரழிவு இடர் மேலாண்மையை மேம்படுத்தும் நோக்கமும் உள்ள பேரிடர் அபாய குறைப்புக்கு தேவையான Sendai Framework அமைப்பதை ஊக்குவிக்க இந்த புதிய முயற்சி துவங்கப்பட்டுள்ளது.

5. இந்திய ரயில்வே சமீபத்தில் அதிவேக ரயில்களுக்காக எந்த நாட்டுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது ?

A. பிரான்ஸ்

B. இத்தாலி

C. ஜப்பான்

D. ஜெர்மனி

**விடை: D. ஜெர்மனி**

இந்தியாவில் அதிவேக ரயில்களை இயக்க சமீபத்தில் இந்திய ரயில்வே ஜெர்மனியுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் மற்றும் ரயில்வே பிரிவில் இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும்.

6. சமீபத்தில் மறைந்த டேரியோ ஃஓ (Dario Fo), நோபல் பரிசு பெற்ற நாடக ஆசிரியர் மற்றும் நடிகர். இவர் எந்த நாட்டை சேர்ந்தவர் ?

A. பிரான்ஸ்

B. இத்தாலி
C. ஜெர்மனி
D. ஐக்கிய ராஜ்யம்

**விடை: B. இத்தாலி**

நோபல் பரிசு பெற்ற இத்தாலிய நாடக ஆசிரியர் மற்றும் நடிகர் டேரியோ ஃஓ (90), சமீபத்தில் இத்தாலியின் மிலனில் காலமானார். இவர், சமூகத்தை சீர்திருத்தும் அரசியல் சார்ந்த நையாண்டி நாடகங்கள் மூலம் மிகவும் அறியப்பட்டவர். “Accidental Death of an Anarchist” மற்றும் “Can’t Pay, Won’t Pay” என்பன அவற்றுள் சில.

7. “Jihad in My Saffron Garden” என்ற புத்தகத்தை எழுதியுள்ளவர் யார் ?
A. அனுராக் காஷ்யப்
B. ராக்ஸி அரோரா
C. கஸ்தூரி சவுகான்
D. பண்டிடா கோஷ்

**விடை: B. ராக்ஸி அரோரா**

“Jihad in My Saffron Garden” என்ற புத்தகத்தை டாக்டர். ராக்ஸி அரோரா என்பவர் எழுதியுள்ளார். இது, பூமியின் சொர்க்கம் என வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியில் காஷ்மீரியாட்டை மீட்க சிலுவைப் போர் செய்யும் ஓர் அஞ்சாத பெண்ணின் கதையாகும். அதே நேரத்தில் இந்த கதையில் உலக அமைதி மற்றும் சகிப்புத்தன்மை பற்றிய செய்தி ஒன்றும் உள்ளது.

8. 2016 ஆம் ஆண்டின் இலக்கியதிற்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது ?
A. பாட்ரிக் மோடியானோ
B. வில்லியம் பாக்னர்
C. பாப் டைலன்
D. ஜான் ஸ்டெயின்பெக்கின்

**விடை: C. பாப் டைலன்**

அமெரிக்க பாடல் பாரம்பரியத்திற்குள் புதிய கவிதை உணர்ச்சிப்பாடுகளை உருவாக்கியதற்காக அமெரிக்க இசைக்கலைஞர் மற்றும் கவிஞர் பாப் டைலனுக்கு 2016 ஆம் ஆண்டின் இலக்கிய நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டிற்கு பிறகு நோபல் பரிசு பெறும் முதல் அமெரிக்கர் இவரே. 8 மில்லியன் ஸ்வீடிஷ் குரோனர் இவருக்கு பரிசாக வழங்கப்படும். இலக்கிய விருதானது ஒரு தனிப்பட்ட வேலைப்பாட்டிற்கு அளிக்கப்படுவதில்லை மாறாக, வாழ்நாள் முழுதும் செய்த சாதனைகளுக்காக வழங்கப்படும்.

9. பின்வரும் யார் வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குநரகத்தின்(Directorate General of Foreign Trade - DGFT) புதிய டி.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார் ?
A. நிலேஷ் மிஸ்ரா

B. அஜய் குமார் பல்லா
C. அனுப் வாதவான்
D. ஜித்சிங்

**விடை: B. அஜய் குமார் பல்லா**

1984-ஆம் தொகுதியின்(Batch) அசாம்-மேகாலயா கேடராக பணியாற்றிய ஐஏஎஸ் அதிகாரி அஜய் குமார் பல்லா, வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குநரகத்தின்(Directorate General of Foreign Trade - DGFT) புதிய டி.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, இவர் வர்த்தக அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக உள்ளார். இவர் தற்போது புதிதாக நியமிக்கப்பட்ட வர்த்தக அமைச்சகத்தின் கூடுதல் செயலாளரான அனுப் வாதவானை வென்று புதிய டி.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் ஒரு இணைக்கப்பட்ட அலுவலகமாக DGFT உள்ளது இதன் தலைமையகம் புது தில்லியாகும். வெளிநாட்டு வர்த்தக கொள்கையை உருவாக்கி செயல்படுத்தும் பொறுப்புகள் இதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, இதன் முக்கிய நோக்கம் இந்தியாவின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதாகும்.

10. சமீபத்தில் மறைந்த பூமிபோல் அடுல்யதேஜ்(Bhumibol Adulyadej), எந்த நாட்டின் மன்னர் ?
A. மலேஷியா
B. தாய்லாந்து
C. இந்தோனேஷியா
D. மாலத்தீவு

**விடை: B. தாய்லாந்து**

88 வயதான தாய்லாந்து அரசர் பூமிபோல் அடல்யதேஜ் (Bhumibol Adulyadej), சமீபத்தில் பாங்காக்கில் காலமானார். இவர் உலகின் மிக நீண்ட காலம் ஆட்சி புரிந்த அரசராவார் மேலும் அரசியல் கொந்தளிப்பு மற்றும் பல ஆட்சிசதிகளின் சுழற்சிகள் தாக்கிய போது நாட்டை நிலைப்படுத்தும் ஒரு நபராக இவர் பார்க்கப்பட்டார். இளவரசர் மகா வஜிராலாங்கோர்ன் புதிய மன்னராக ஆக உள்ளார்.